**ஒழுங்குபடுத்தப்பட்ட சக்தி வன்மை மற்றும் வலையமைப்பு வினைத்திறன் அபிவிருத்தி செயற்திட்டம் - 2013**

---

ஒழுங்குபடுத்தப்பட்ட சக்தி வன்மை மற்றும் வலையமைப்பு வினைத்திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபி) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் 2013 மே 08 இல் கைச்சாத்திடப்பட்ட 2892 எஸ்ஆர்ஜ ஆம் 2893 ஆம் எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) 0303 எஸ்ஆர்ஜ (ஈஎவ்) மானிய இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 11 ஆம் உறுப்புரையின் 2.09 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் நோக்கங்கள், அமுலாக்கல், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

ஒழுங்படுத்தப்பட்ட சக்தி வன்மை மற்றும் வலையமைப்பு வினைத்திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் படி, மின்வலு சக்தி அமைச்சு நிறைவேற்று முகவராகவும் இலங்கை மின்சார சபை (சிஈபி) செயற்திட்டத்தின் முழுப்பகுதிகளினதும் அமுல்படுத்தும் முகவராகவும் உள்ளன. அதே நேரம் பகுதி 7 இற்கான அமுல்ப்படுத்தும் முகவர் நிலைபேறான சக்தி அதிகார சபையாக (எஸ்ஈஏ) இருக்கும். இலங்கையில் மின்சார வழங்கலை வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சக்தி வழங்கலை அதிகரிப்பதும் முன்னேற்றுவதுமே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

2012 ஆகஸ்ட் செய்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியன் அல்லது ரூபா 25,240 மில்லியனானதுடன் இதில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.அ.டொலர் 131.5 மில்லியனுக்கு சமனான ரூபா 16,595.3 மில்லியனை வழங்குவதற்கு உடன்பட்டது. செயற்திட்டமானது அதனது செயற்பாடுகளை 2013 செப்தெம்பர் 30 இல் ஆரம்பிக்க வேண்டுமெனவும் 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டிருந்தது. நிதியளிப்பு மூலத்தின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| மூலம் | பகுதி இலக்கம் | ஐ.அ. டொலர் மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி நிதியம் (ஏடிஎவ்) கடன் -- சிஈபி | 1 | 30.0 | | 3,786.00 | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி சாதாரண மூலதன வளம் (ஓசிஆர்) கடன் --- சிஈபி | 2,3,4,5,6 & 7(i) | 100.0 | | 12,620.50 | |
| மானியம் - ஒழுங்குபடுத்தப்பட்ட சக்தி நிதியம் * | 7(ii) (iv) | 1.5 | 131.5 | 189.30 | 16,595.3 |
| உப மொத்தம் | | | | | |
| இலங்கை அரசாங்கம் | | 68.5 | 68.5 | 8,644.7 | 8,644.7 |
| மொத்த மதிப்பீட்டுக் கிரயம் | | | 200.00 | | 25,240 |

* ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிர்வகிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தி சக்தி நிதியளிப்பு பங்குடமை வசதியின் கீழ் பல வகைப்பட்ட - நன்கொடை ஒழுங்குபடுத்தி சக்தி நிதியம் உள்ளது.
பங்களிப்புகள் அவுஸதிரேலியா, நோர்வே, ஸ்பெயின் மற்றும் சுவீடன் அரசாங்கங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களை தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், செயற்திட்ட நிதிகளில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஈ) வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும், ஆகும்.

## 3. அபிப்பிரயாம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல்

குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களில் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 59,940,122 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செயற்பாடுகள் | 2013 ஆம் ஆண்டிற்கான செலவினம் ரூபா |
|---|---|
| மன்னார் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பு | 11,839,172 |
| புதிய பெல்பிட்டிய மின் பரிமாற்ற அபிவிருத்தி செயற்திட்டம் | 16,853,330 |
| பாதுக்கை மற்றும் கேகாலை மின் பரிமாற்ற அபிவிருத்தி செயற்திட்டம் | 14,955,233 |
| நடுத்தர வோல்ரேச் வலையமைப்பு சக்தி வினைத்திறன் முன்னேற்றம் | 16,292,387 |
| மொத்தம் | 59,940,122 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்ட உத்தியோகத்தர் கடனுக்கான வட்டி ரூபா 1,715,526 மீள செயற்திட்டத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் அது செயற்திட்ட செலவினமாக கருதப்பட்டுள்ளது.

(ஆ) 2013 ஆகஸ்ட் 26 இல் ஜா-எல மற்றும் மன்னாரில் அமைந்துள்ள அலுவலக கட்டிடத்திற்காக குத்தகை வாடகை முற்பணமாக ரூபா 1,197,600 செயற்திட்டத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் செயற்திட்ட செலவினமாக ரூபா 349,600 பெறுமதியான வாடகைப் பெறுமதியை மீளாய்வாண்டின் 3 மாதங்களிற்காக சாட்டுதல் செய்யாமல் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாக மொத்த முற்பணம் காட்டப்பட்டிருந்தது. மேலும், செயற்பாட்டுத் திகதியின் ஒருவருடத்தின் பின் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் நிதிகளின் உள்ளவாறான பயன்பாடு தொடர்பான சில புள்ளி விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| நிதிமூலம் | மதிப்பீட்டுக் கிரயம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 131.5 | 16,595.3 | - |
| இலங்கை அரசாங்கம் / இலங்கை மின்சார சபை | 68.5 | 8,644.7 | 60 |
| மொத்தம் | 200 | 25,240.0 | 60 |

## 6.2 பயன்பாடற்ற சொத்துக்கள்

செயற்திட்டத்தின் பகுதி – 06 அலுவலகத்திற்காக வாடகைக்கமர்த்தப்பட்ட கட்டிடம் (நடுத்தர வோல்டேக் வலையமைப்பு ஒழுங்குபடுத்தல் வினைத்திறன் முன்னேற்றம்) 2013 இலிருந்து குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்காக 2014 ஆகஸ்ட் வரை ரூபா 540,000 தொகையான வாடகை செலுத்தப்பட்டது.

## 6.3 பௌதீக முன்னேற்றம்

மீளாய்வாண்டின் போது பிரதான நடவடிக்கைகளிற்கு பதிலாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்புபட்ட ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.